**செய்தி வெளியீடு எண்:508** **நாள்: 04.08.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.8.2017) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறையின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் பதிவுத்துறை அலுவலகங்களில், பதிவு ஆவணங்களைப் பராமரிப்பதற்கும், பணியாளர்கள் திறம்படப் பணியாற்றுவதற்கும், போதிய இடவசதி இல்லாததை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்கின்ற சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு தக்க வசதிகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருதியும், வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்த கட்டடங்கள் கட்டும் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் 33 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 19 பதிவுத்துறை ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் 153 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், பதிவுத்துறையின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் 300 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில் தரை மற்றும் முதல் தளத்துடன் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இப்புதிய சார்பதிவாளர் அலுவலகத்தில், அலுவலர் அறைகள், கணினி அறை, பதிவுருக்கள் பாதுகாப்பு அறை, பொதுமக்களுக்கான காத்திருப்போர் அறை, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான சாய்தளமேடை, அகலமான நடைபாதை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்பறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பி. பாலகிருஷ்ண ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / பதிவுத் துறை தலைவர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**